# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 9-10 - மாலை நண்ணி[1]

**('நீர் விரும்பியவை யாவும் உமது இவ்வுடம்பு முடியும் போது தருவேன்' என்று ஆழ்வாருக்கு எம்பெருமான் அருள, அவர் உவந்து, திருக்கண்ணபுரத்திலே சென்று அவனைச் சேருமாறு பிறர்க்கு உபதேசித்தல்)**

3656 * மாலை நண்ணித் * தொழுதெழுமினோ வினை கெட *
காலை மாலை * கமல மலர் இட்டு நீர் **
வேலை மோதும் மதிள் சூழ் * திருக்கண்ணபுரத்து *
ஆலின் மேலால் அமர்ந்தான் * அடி இணைகளே 1

3657 கள்ளவிழும் மலர் இட்டு * நீர் இறைஞ்சுமின் *
நள்ளி சேரும் வயல் சூழ் * கிடங்கின் புடை **
வெள்ளி ஏய்ந்த மதிள் சூழ் * திருக்கண்ணபுரம்
உள்ளி * நாளும் தொழுதெழுமினோ தொண்டரே! 2

3658 தொண்டர்! நுந்தம் * துயர் போக நீர் ஏகமாய் *
விண்டு வாடா மலர் இட்டு * நீர் இறைஞ்சுமின் **
வண்டு பாடும் பொழில் சூழ் * திருக்கண்ணபுரத்து
அண்ட வாணன் * அமரர் பெருமானையே 3

3659 மானை நோக்கி * மடப் பின்னை தன் கேள்வனை *
தேனை வாடா மலர் இட்டு * நீர் இறைஞ்சுமின் **
வானை உந்தும் மதிள் சூழ் * திருக்கண்ணபுரம் *
தான் நயந்த பெருமான் * சரணாகுமே 4

3660 சரணமாகும் * தன தாள் அடைந்தார்க்கெல்லாம் *
மரணமானால் * வைகுந்தம் கொடுக்கும் பிரான் **
அரண் அமைந்த மதிள் சூழ் * திருக்கண்ணபுரத்
தரணியாளன் * தனதன்பர்க்கு அன்பாகுமே 5

3661 அன்பனாகும் * தன தாள் அடைந்தார்க்கெல்லாம் *
செம்பொன் ஆகத்து * அவுணன் உடல் கீண்டவன் **
நன்பொன் ஏய்ந்த மதிள் சூழ் * திருக்கண்ணபுரத்து
அன்பன் * நாளும் தன் மெய்யர்க்கு மெய்யனே 6

3662 மெய்யனாகும் * விரும்பித் தொழுவார்க்கெல்லாம் *
பொய்யனாகும் * புறமே தொழுவார்க்கெல்லாம் **
செய்யில் வாளை உகளும் * திருக்கண்ணபுரத்து
ஐயன் * ஆகத்தணைப்பார்கட்கு அணியனே 7

[1] இது கோவில் திருவாய்மொழி

3663 அணியனாகும் * தன தாள் அடைந்தார்க்கெல்லாம் *
பிணியும் சாரா * பிறவி கெடுத்தாளும் **
மணிபொன் ஏய்ந்த மதிள் சூழ் * திருக்கண்ணபுரம்
பணிமின் * நாளும் பரமேட்டி தன் பாதமே 8

3664 பாதம் நாளும் * பணியத் தணியும் பிணி *
ஏதம் சாரா * எனக்கேல் இனி என் குறை? **
வேத நாவர் விரும்பும் * திருக்கண்ணபுரத்து
ஆதியானை * அடைந்தார்க்கு அல்லல் இல்லையே 9

3665 இல்லை அல்லல் * எனக்கேல் இனி என் குறை? *
அல்லி மாதர் அமரும் * திருமார்பினன் **
கல்லில் ஏய்ந்த மதிள் சூழ் * திருக்கண்ணபுரம்
சொல்ல * நாளும் துயர் பாடு சாராவே 10

3666 * பாடு சாரா * வினை பற்றற வேண்டுவீர் *
மாட நீடு * குருகூர்ச் சடகோபன் ** சொல்
பாடலான தமிழ் * ஆயிரத்துள்[2] இப்பத்தும் *
பாடி ஆடிப் * பணிமின் அவன் தாள்களே[3] 11

**அடிவரவு:** மாலை கள் தொண்டர் மானை சரணம் அன்பன் மெய்யன்
அணியன் பாதம் இல்லை பாடு தாள்

[2] ஆயிரத்து
[3] தாள்களையே